RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2412

OPEN ACCESS

# தமிழ்நாடன் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

க. செல்வராஜ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் அரசுக் கலைக்கல்லூரி, இராசிபுரம் - 637401, நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா.

# A Study on Feminist Thoughts in Tamilnadan's Poetry

**K. Selvaraj [a, *]**

[a] Department of Tamil, Thiruvalluvar Government Arts Colleg, Rasipuram, Namakkal-637401, Tamil Nadu, India

* Corresponding Author: ragamugil@gmail.com

Received: 07-11-2023
Revised: 30-12-2023
Accepted: 11-01-2024
Published: 19-01-2024

Check for updates

**ABSTRACT**

In Tamil literature, poetry occupies a separate field and it undergoes many evolutions. Many writers wrote poetry and excelled in literature. One among such is vanampaadi poet Thamizhnadan. Through his poems he talked about social norms. Because of his poetry he became popular. His poems are filled with feminist ideas and said that a woman's contribution will bring up a change in society. Thus this article is a clear explanation about all these in detail.

**Keywords:** Tamil literature, Thamizhnadan, Society, Poems

## முன்னுரை

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இச்சொல் 'Femine' என்ற இலத்தீன் மொழிச்சொல்லில் இருந்து தோன்றியது என்பர். "பெண் என்னும் சொல்லுக்குப் பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் என்பது பொருள்" இச்சொல் முதன் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது (Muthu Chidambaram, 2010). பின்பே பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

பெண்ணியத்தைப் பற்றி பார்பராஸ்மித் (Barbara smith) கூறுகையில், "பெண்ணியம் என்பது எல்லா பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளையில் இருந்து விடுவித்தல் என்ற கொள்கையை உடையதாகும். இளம்பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப்பெண்கள் தன்னினச் சேர்க்கையுடைய பெண்கள் (Lesbians) வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும் மரபு மணமுறையிலும் துன்புறும் பெண்கள் இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும் என்கிறார்" (Prema, 2001). இதன்படி அனைத்து வகையிலும் பெண்களுக்கான நடைமுறை சிக்கலில் உள்ள குறைகளைக் களைந்து பெண்களுக்குரிய உரிமைகளை நிலை நாட்டும் அமைப்பாகப் பெண்ணிய இயக்கங்கள் தோன்றின எனலாம்.

பெண்ணியம் எனும் சொல்லுக்கு தெற்காசிய நாடுகள் "பெண்கள் சமூகத்திலும் அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றி அமைக்க ஆண்களும், பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படும் முயற்சிகளும்" என்ற விளக்கத்தை முன்வைக்கின்றன (Muthu Chidambaram, 2010).

புட்சர் என்பவர் "பெண்ணியம் என்பது பெண்கள் பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதார துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே" என்கிறார் (Muthu Chidambaram, 2010). பெண்ணியம் பேசுகின்ற பெண்கள் அனைவரும் ஆண்களை வெறுப்பவர்கள் அல்லர். ஆணாதிக்கத்தை மட்டுமே வெறுப்பவர்கள். பெண்ணிய வாதிகளோடு ஒத்துப்போகின்ற ஆண்களோடு இணைந்து செயல்படுவது பெண்ணிய முன்னேற்றத்திற்கான வழிமுறைகளில் ஒன்று.

## பெண்ணிய வளர்ச்சி

பெண்ணிய வளர்ச்சிக்கான மூலம் குடும்பம் தான். குடும்பத்திலிருந்து பெண்ணியம் மலர்ந்தால் தான் அது சிக்கலில்லாமல் தன்னுடைய இலக்கை எட்டமுடியும். "பெண்ணியம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவான, நேர்மையான, சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும் கூடிய சமூகம் உருவாக வேண்டும் என்று விரும்புகிறது." இக்கருத்து பெண்ணியம் என்பது சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முனைகிறது என்பதையே வழியுறுத்துவதாகவே அமைகிறது (Muthu Chidambaram, 2010).

இருள்வாழ்க்கையில் இருந்த பெண்கள் மெல்லமெல்ல வெளிவாழ்க்கையாகிய வெளிச்சத்திற்கு வரமுற்பட்டனர். சமுதாயத்தால் கொடுக்கப்பட்ட பொருமைசாலி, தியாகி, குடும்பவிளக்கு, குலக்கொடி இதுபோன்ற அடிமை விலங்குகளில் இருந்து வெளிப்படும் துணிச்சலைப் பெற்றவர்களாகப் பெண்கள் விளங்கினர். பெண் உரிமை என்பது ஒட்டுமொத்த சமுதாய உரிமையை நோக்கி இயங்குவதையே குறிக்கோளாகக் கொண்டது.

"எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமை
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்விசு காதாரம் வாய்த்திடுக
வில்லார்க்கும் நல்லநுதல் மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றேமணி முரசம் ஆர்ப்பீரே"

என்னும் பாரதிதாசனாரின் பாடல் இங்கு ஒப்புநோக்கதக்கதாகும். அனைத்து உரிமைகளும் அனைவருக்குமானது என்னும் நோக்கில் பெண்ணுக்கு நீதிவழங்க உரிமைக்குரல் கொடுக்காது தான் பெண்ணிலைவாதம் எனலாம் (Bharathidhasan, 1938).

மேற்குறிப்பிட்ட கருத்துகள் வழி ஆணும், பெண்ணும் ஒருவரைபுரிந்து கொண்டு அதன்வழி செயல்படுவதும், பெண்களுக்கெதிராக நடைபெறும் சமூகஅவலங்களை எதிர்ப்பதும், பெண்ணியத்தின் நோக்கமாகக் கருதலாம்.

சமுதாயத்தில் நடந்து வரும் வரதட்சணைக் கொடுமை, ஆண், பெண் ஏற்றத்தாழ்வு பெண்சிசுக்கொலை, பாலியல் கொடுமைகள், குடும்ப உறவுகளினால் ஏற்படும் தொல்லைகள். இது போன்று பெண்களுக்கு இழைக்கப்படும் பிறஅநீதிகளுக்கு எதிராகப் பெண்ணியவாதிகள் குரல் கொடுக்கத்து வங்கினர்.

பாரதி தொடங்கி தற்காலக் கவிஞர்கள் வரையில் பலர் பெண்ணியக் கருத்துக்களைக் படைத்துள்ளனர். அவற்றுள், பெண்களுக்கெதிரானவன் கொடுமைகள் வீட்டிலும், வெளியிலும் பெண்கள் சந்திக்கும் சிக்கல்கள், பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கான வழிமுறைகள் போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு கவிதைகளை படைத்துள்ளனர்.

## இந்தியக்கல்வி

கல்விமுறை என்பது காலச்சுழல்களுக்கேற்ப மாறுவது சிறப்பு. அம்மாற்றம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். குறிப்பாகப் பெண்கல்வி குறித்த விழிப்புணர்வைத் தூண்டும் விதமாக அமைய வேண்டும். புதுமை சிந்தனைகளை உள்ளடக்கியதாக பெண்ணுக்குரிய சிக்கலையும்

அச்சிக்கலுக்குரிய தீர்வையும் சொல்லக்கூடிய கல்விமுறையே அவசியமானது. நம்நாட்டின் கல்விமுறையில் காணப்பெறும் பிற்போக்குத்தனமான கருத்துக்களை நீக்கவேண்டும் எனும் நோக்கில்,

"தூபம்காட்டவும்

தொட்டில்ஆட்டவும்

காபிபோடவும்

வீட்டைப்பெருக்கவும்தான்

இங்குக்கற்பிக்கப்படும்எனில்தோழி,

பூஜைவிளக்கைஎடு

புத்தகத்தைக்கொளுத்து

பின்பெஞ்சுகளில்

பள்ளிக்கொண்டுள்ளது

இந்தியக்கல்வி"

என்ற கவிதையின் வழி அறியமுடிகிறது. நடைமுறை வாழ்க்கைக்கு பயன்தராத கல்வி தேவையில்லை (Tamilnadan, 2002). பிள்ளை பேறுபெறவும், வீட்டார் மற்றும் விருந்தினரை உபசரிக்கவும், வீட்டுவேலைகளைக் கவனித்துக்கொள்ளும் முறைமைகளைக் கற்றுத்தரும் கல்வியால் பயனேதும் இல்லை. அப்படிப்பட்ட கல்வியைப் புறம் தள்ளுவோம் என்று கூறுவதைத் தமிழ்நாடன் கவிதையின் வழி அறியமுடிகிறது.

## நேர்முகத்தேர்வின் அவலம்

சமுதாய கட்டமைப்பின் புறச்சூழலில் ஆண், பெண் இருவருக்குமான இடையூறுகள் பல உண்டு. ஆனால், ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு அதிக அளவில் உண்டு. மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் துன்பங்களை அனுபவிக்கும் பெண்கள் ஏராளம். அதுவீட்டில் துவங்கி வேலைபார்க்கும் அலுவலகம் வரை நீண்டு கொண்டே இருக்கிறது. வேலைக்குப் போகும் முன்னே நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளும் பெண்ணின் நிலையைக் கூற வந்த கவிஞர்,

"மீன்கண்மீனா

இன்டர்வியூக்குப் போனா

கேள்வி கேட்டவர்

கண்கணைப்பட்டே

சினையாகிப் போனா"

என்று எழுதுவதன் மூலம் சில நேர்முகத் தேர்வின் அவலங்களைச் சமுதாயத்தின் பார்வைக்குக் கொண்டு வருகிறார் (Tamilnadan, 2002). பார்வை என்பது ஒருதன்மை என்றாலும் அது பார்க்கப்படும் விதத்திற்கு பல அர்த்தங்கள் உண்டு. அதுபோல கேட்கப்படும் கேள்விகளும் அது போன்றிருப்பதை தமிழ்நாடன் கவிதைகள் உணர்த்துவதை அறியமுடிகிறது.

## பாலியல் பெண்கள்

பெண்களைப் பற்றி பெருமையாகப்பேசும் இந்நாட்டில் சில இடங்களில் பெண்கள் இழிவாக நடந்துகொள்ளும் சூழல் உள்ளதை மகாபாரதக் காட்சிகளை அடியொட்டி தற்காலச் சூழ்நிலையோடு

ஒப்பிட்டுப் பேசுவதைக் கவிஞரின் கவிதையில் காணமுடிகிறது. பாலியல் தொழில் செய்யும் பெண்களைப்,

"துச்சாதனன் ஆடையை

திரௌபதி களைவாள்

தேசிய நெடுஞ்சாலை ஓரம்"

என்று எழுதுகிறார். மகாபாரதத்தில் திரௌபதி ஆடையைத்துச் சாதனன்களைந்தான். ஆனால், பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் அதற்கு நேர்மாறாக நடந்துகொள்கிறார்கள் என்று கூறுவதன் மூலம் பாலியல் தொழில் சமுதாய சீர்கேடுகளுக்கு வழிவகுக்கிறது என்பதை தமிழ்நாடன் (Tamilnadan, 2002).

கவிதைகள் வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. பெண்களில் சிலர் தவறான வழிகளில் சென்று தாங்களே தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கின்றனர் என்கிறார். இதற்கு இச்சமூகம் தான் பொறுப்பு. பலநிலைகளில் பெண்விடுதலை என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. பெண்கள் சுயசார்பு அடையாத தன் விளைவுதான் இது போன்ற பாலியத்தொழில் உருவாகக் காரணம். சமூகவிடுதலை, பொருளாதார விடுதலை, தனிவிடுதலை ஆகியவற்றைப் பெண்களுக்குக் கொடுப்பதன் மூலம் பாலியல் தொழில்களாகச் செயல்படும் பெண்கள். அத்தொழில்

## ஊடகச் சீர்கேடு

மக்கள்தொடர்பு ஊடகங்களில் மிகவும் வலிமையான ஊடகமாகத் திகழ்வது திரைப்படம் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. அத்திரைப்படங்களின் வழிபேசப்படும் கருத்துகளும் காட்டப்படும் காட்சிகளும் வெகுசுலபமாக மக்களின் மனதில் பதிந்துவிடுகிறது. அப்படிப்பட்ட ஊடகங்கள் சமுதாய பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். சீரழிவிற்குக் காரணமாக நடப்பதைத் தவிர்க்க வேண்டும். திரைப்படங்களில் நடக்கும் சீரழிவைக் கூறவிரும்பிய கவிஞர்,

“இராவணன் சினிமா எடுப்பான்

மடியில் கிடந்து படவாய்ப்புக் கேட்டுக்

கெஞ்சுவாள் சீதை”

என்று எழுதுகிறார் (Tamilnadan, 2002). அன்று, ஒருவனுக்கு ஒருத்தியாகப் படைக்கப் பட்டபாத்திரம் இன்று படவாய்ப்பிற்காகச்சோரம் போகிறது என்று சொல்வதன் மூலம் உயர்வான பெண்பாத்திரம் கீழானநிலையில் காட்டப்படுவதை தமிழ்நாடன் கவிதைகள் சுட்டுகின்றன. இந்நிலைமாற வேண்டும். பெண்களைப் பேசும் பொருளாகக் காட்டுவது கைவிடப்பட வேண்டும். அப்பொழுது பெண்களின் வாழ்வியல் முன்னேற்றம் ஏற்படும்.

## பெண்ணுரிமை இல்லா நாடு

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட உரிமைகள் உண்டு. அவரவரின் உரிமைகள் பறிக்கப்படுகின்ற பொழுது தனக்கான உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள போராடத் தயாராகின்றனர். அப்போது தான் மறுப்புக் கருத்துரைகள் அதிகம் வெளிப்பட்டு வருகின்றனர். ஏன், எதற்கு, எனும் கேள்விகளைத் துணிச்சலுடன் கேட்க ஆரம்பிக்கின்றனர். கிடைக்கும் பொழுது பெற்றுக்கொள் அதுவரைக்கும் அமைதியாக இரு என்ற வாசகத்தை நம்பி இனியும் ஏமாந்திருக்க முடியாது என்பதை,

"நான் ஏன் கல்லாய்க்கிடக்க வேண்டும்?

உடல்பெறும் உரிமை

உண்டு எனக்கு

நான்ஏன் உயிரற்றுப் போகவேண்டும்?

உயிரோடு வாழும் உரிமை

உண்டு எனக்கு

அமைதியாய் இரு என்பாரே

வழக்கிடும் உரிமை

உண்டு எனக்கு

பெண்ணுரிமை இல்லாநாடு

பேய்கள் வாழும் சுடுகாடு"

என்ற கவிதையில் பெண்களுக்கான உரிமைகள் கேள்விகளாய் வைக்கப்படுகின்றன. உணர்ச்சியற்ற நிலையில் ஏன் வாழவேண்டும் (Tamilnadan, 2002). உயிரை ஏன் மாய்த்துக் கொள்ள வேண்டும். வழக்குபோடும் உரிமை இருக்கின்ற பொழுது அமைதியாய் ஏன் இருக்கவேண்டும். பெண்களுக்கான உரிமைகளை நிலைநிறுத்தும் நாடுதான் நாடாகக் கருத்தில் கொள்ளப்படும். பெண்ணுரிமையைக் கொடுக்காத நாடு சுடுகாட்டிற்குச் சமம் என்று தமிழ்நாடன் சாடுவதை அவரின் கவிதையின் வாயிலாகக் காணமுடிகிறது.

## முடிவுரை

இந்தியாவில் பெண்ணியம் வலுவான ஒரு இயக்கமாக தோற்றம் பெற்ற பிறகு பெண்களுக்கான உரிமையை முன்னெடுத்துச் செல்லும் கருவியாக நவீனஇலக்கியங்கள் அமைந்தன. சமூகத்தில் நிலவும் பல்வேறு சூழ்நிலைகளைச் சித்தரித்து அதன்மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வூட்டி பெண்களை எழுச்சிகொள்ளச் செய்த இலக்கியங்களுள் கவிதைஇலக்கியம் முக்கியப்பங்கு வகிக்கிறது. அதிலும் குறிப்பாக, புதுக்கவிதை இலக்கியவாதிகள் பெண்மையைப் பாடுபொருளாக வைத்து பல்வேறு காலங்களில் பல படிநிலைகளில் பெண்களுக்கான சிக்கல்களைச் சமூகத்தின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளனர். சமுதாயத்தின் அனைத்து படிநிலைகளிலும் பெண் என்பவள் தனக்கான விடுதலையைத் தேட வேண்டும். தனக்கெதிராக இருக்கும் தடைகளை உடைக்க வேண்டும். பெண்களின் உரிமைகளுக்கு குரல்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவரின் மனதிலும் ஆட்கொள்ள வேண்டும் என்பதே தமிழ்நாடனின் நிலையாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## References


Bharathidhasan, (1938) Bharathidhasan Kavithaikal, Bharathidhasan Pathippagam, Pondicherry, India

Muthu Chidambaram, S. (2010) Penniyam Thotramum Valarchiyum, Thirunelvi, India

Prema (2001) Penniyam, Tamil Puthagalayam, Chennai, India

Tamilnadan, (2002) Tamilnadan Kavithaigal, Kavya Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License